[1986 மே 2

மார்த்தாண்டம் தேன் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.

642—(* வினா எண். 8988)—திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் தேன் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் தேன் தேங்கி இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: (அ) மார்த்தாண்டம் தேன் உற்பத்தியாளர் சங்கத்தில் தேன் தேக்கம் எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

திரு. மா. சுந்தரதாஸ்: தலைவர் அவர்களே, தேன் தேக்கம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சொசைட்டியில் பல லட்சக் கணக்கான ரூபாய் தேன் தேங்கி இருப்பதாக அங்கே இருக்கிற அதிகாரிகள் சொல்கிறார்கள். தேன் உற்பத்தி செய்வது சீசனல் பிசினஸ் ஆக இருப்பதால் உடனடியாக அவர்களுக்கு ஊதியம் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். தேனை அரசே ஏற்று அதை மார்க்கெட்டிங் செய்து கொடுப்பதற்கு முன்வருமா ?

(மாலை 4-40)

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: தலைவர் அவர்களே, இந்த மார்த்தாண்டம் தேன் சொசைட்டியில் தேன் உற்பத்தியாகும் பருவ காலம் ஒரு ஆண்டிலே ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே ஆகிய மாதங்கள் ஆகும். 1—1—1986-ல் 6 ஆயிரம் கிலோ தேன் இருப்பில் இருந்தது. ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் கொள்முதல் செய்யப்பட்டது 25 ஆயிரம் கிலோ. விற்பனை போக 31—3—1986 முடிய 17,787 கிலோ தேன்

1986 மே 2]

இருப்பில் உள்ளது. அதன் மதிப்பு ரூ. 3.02 லட்சம் ஆகும். இப்பருவ காலத்தில் தேன் இருப்பு சாதாரண நிலையில் உள்ள இருப்புத்தான். தேக்கம் என்பதற்கு இல்லை. ஆயினும் தமிழ்நாடு கதர்—கிராமத் தொழில் வாரியத்திற்குச் சொந்தமான அங்காடிகளுக்கும் மற்றும் சர்வோதய சங்கத்திற்குச் சொந்தமான சிறப்பு அங்காடிகளுக்கும் பருவம் அல்லாத காலங்களில் விற்பனை செய்வதற்குத் தேவைப்படுகிறது. ஒரு வருஷ காலம் வரையில் தேன் கெடாமல் இருக்கிறது. 1—4—1986-ல் தேன் கொள்முதல் விலை 18 ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது. ஆனால் இந்தத் தேன் முதலில் 20 ரூபாய் 50 காசு என்று விற்றதைப் போலவே இப்பொழுதும் பழைய விலைக்கே விற்க வேண்டும் என்று கதர்—கிராமத் தொழில் வாரியம் ஏற்பாடு செய்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவையின் தளநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருந்தகை அவர்கள் குறிப்பிடுகின்றபொழுது தேன் சேகரிக்கப்பட்டு ஓராண்டுக் காலம் வரையில் கெடாமல் இருக்கும் என்று சொல்கிறார்கள். எத்தனை ஆயிரம் ஆண்டுக் காலம் இருந்தாலும் தேன் கெடாது. “தேனாய் இன்னமுதமுமாய் தித்திக்கும் சிவபெருமான்” என்று மணிவாசகப் பெருந்தகை அவர்கள் குறிப்பிடுகிறார்கள். எனவே, தேன் என்ற அந்த அழியாத பொருளில் போட்டிருக்கும் பொருள் அழியாமல் இருக்கும்படி அரசாங்கம் பார்த்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மூலக் கேள்வி கேட்ட மாண்புமிகு உறுப்பினரவர்கள் தேன் தேங்கியிருப்பதைப் பற்றிக் கேள்வி கேட்டிருந்தார்கள். அதனால்தான், அதிகமாகத் தேன் தேக்கம் இல்லை என்று குறிப்பிட்டேன். குறைந்த அளவுதான் இருக்கிறது. அதை ஒரு வருட காலத்திற்குள்ளாக விற்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று சொன்னேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினரவர்கள் பழைய தேன் இருப்புகளில் செய்த பொருட்களை அழியாமல் விற்பனை செய்வது சம்பந்தமாகக் கேட்டு, அதற்கு அரசு வழிவகை செய்யுமா என்று

கேட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதைப்பற்றி தற்போது என்னிடத்திலே விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி போட்டால் அதைப் பற்றி விவரமாகப் பதில் அளிக்க முடியும்.

பச்சையாறு அணைத் திட்டம்.

643—(*வினா எண். 3446)—திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், பச்சையாறு அணைத் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) மற்றும் (ஆ) இத் திட்டம் மேற்கொள்ள சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியக் கூறுகள் ஏன் இல்லை என்பதை அறிவதோடு தங்கவால் குரங்கு அங்கே இருப்பதாகவும் சிலர் சொல்கிறார்கள். அந்த குரங்குகளுக்கும் தண்ணீர் பெருக்கெடுத்து வருவதற்கும் சம்பந்தம் இல்லை என்றும் சொல்கிறார்கள், அது உண்மையா? வன இலாக்கா அதிகாரிகள் பார்த்தும், அதற்குச் சம்பந்தம் இல்லை என்று சொல்கிறார்களே, தமிழக அரசு இது சம்பந்தமாகத் தீர்க்க ஆலோசனை செய்து மத்திய அரசோடு பேச முடியுமா? இது சம்பந்தமாகப் பரிசீலனை செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.